**<u>முதன்மை வாடகை கட்டுப்பாட்டு நீதிமன்றம், திருநெல்வேலி</u>**

**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>**

**R.L.T.O.P. No. 11/2023**

20.07.2026 RW–1

| | |
|---|---|
| பெயர் | திரு.மைதீன் பிச்சை |
| த.பெ. | திரு. மைதீன் பட்டானி |

**<u>சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. சென்ற முறை 5 மாத வாடகையினை செலுத்தியுள்ளதாக சொல்லியுள்ள போது அந்த வங்கி ரசீதுகளை நான் இன்று கொண்டுவந்துள்ளேனா என்றால் தேடிப் பார்த்தேன் எங்கே வைத்தேன் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. வங்கி வரவு செலவு பட்டியலின் அடிப்படையில் நான் 5 மாத வாடகையினை அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வாடகை பாக்கி வைத்துள்ளேன், அதை வங்கியின் வாயிலாக அனுப்பவில்லை என்று சொன்னால் தவறு. எனக்கு இரண்டு மகன்கள். அதில் ஒரு மகன் அஜ்மல் மின்வாரிய குடியிருப்பில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவருடன் தான் நான் குடியிருந்து வருகிறேன் என்று சொன்னால் தவறு.
2. மனு தபசில் சொத்தில் நான் குடியிருக்கவில்லை என்றும் என் மகன் அஜ்மலுடன் நான் குடியிருந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தபசில் வீடு உடைந்து உள்ளது என்றால் காம்பவுண்டு சுவர் கடந்த 10 வருடங்களாக உடைந்து உள்ளது. கடந்த 10 வருடங்களாக தபசில் சொத்தில் உள்ள வீட்டிற்கு நான் தேவையான அடிப்படையான பராமரிப்பு செய்திடவில்லை என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் சங்ககிரி சிமெண்ட் பிளான்டில் வேலை செய்து வந்து தற்போது தாழையூத்துக்கு வந்து சிமெண்ட் தொழிற்சாலைக்கு வேலை மாறுதலாகி வந்துவிட்டார் என்றும் எனவே அவருக்கு சொந்த உபயோகத்திற்காக தபசில் வீடு தேவைப்படுகிறது என்றால் அவருக்கு நான்கு வீடுகள் உள்ளது.
3. மனு தபசில் சொத்து மட்டும் தான் மனுதாரருக்கு உள்ளது என்றும் அதனால் அந்த வீடு அவருக்கு தேவைப்படுகிறது என்று சொன்னால் தவறு. நான் மனு தபசில் வீட்டில் அடிப்படை பராமரிப்பு எதுவும் செய்யாமல், அதற்கான வாடகை முறையாக செலுத்தி வராமல், மனுதாரருக்கு அந்த

வீடு நல்ல எண்ணத்தின் அடிப்படையில் சொந்த உபயோகத்திற்காக தேவைப்படும் போது அவருடைய வீட்டை அவருக்கு கொடுக்காமல் நான் நொந்தரவு செய்து வருகிறேன் என்றால் தவறு. நான் என் மகனுடன் குடியிருந்து விட்டு தற்போது அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. மனுதாரருக்கு அவருடைய வீட்டை கொடுக்காமல் கெட்ட எண்ணத்தின் அடிப்படையில் இந்த வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் தவறு. மனுதாரர் கோரிய படி அதில் உள்ள காரணங்களுக்காக இந்த வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் தவறு. நான் நடந்த உண்மைக்கு மாறாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

VENKATACHALAM MONIKA

Deposition uploaded on 20.07.2026
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.07.20 15:36:45 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**திருநெல்வேலி**